KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(VIA) KARAIKUDI

# திருவிடவெந்தை மாஹாத்மியம்



Registered Copyright] [விலை அணா ஒன்று

# முகவுரை

திருவிடவெந்தை மாஹாத்மியத்தைச் சுருக்கமாக எழுதி வெளியிடுகின்றோம். எங்கள் விண்ணப்பத்துக்கு இணங்கி, இந்த திவ்விய தேச சம்பந்தமாகத் திருமங்கை மன்னன் மங்களாசாசனஞ் செய்துள்ள திருமொழிக்குத் தெளிவான உரையெழுதியும், இச்சிறு நூலைச் செப்பனிட்டுச் சரிபார்த்தும் உபகரித்த சென்னைச் சர்வகலாசாலைத் தமிழகராதி நிலையத்துத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் - ஸ்ரீமான் : ராவ்சாஹெப் : உபயவேதாந்த சிகாமணி - மு. இராகவையங்கார் சுவாமிகட்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றோம். இத்திருக்கோயிலின் திருமதில்கள் சிலவிடங்களில் விழுந்து கிடக்கின்றன. பக்த கோடிகள் பகவத் கைங்கரியத்தில் ஈடுபட்டு இவைகளைச் சீர்திருத்தி ஸ்ரீ வராஹமூர்த்தியின் கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாவார்களாக. இச்சிறு வெளியீடு அன்பர்களால் ஆதரிக்கப்பட்டால், விரிவான புராணவரலாறு பெரிய வடிவில் கூடிய சீக்கிரம் வெளியிடப்படும்.

இப்படிக்கு

திருவிடவெந்தை
ஸ்ரீ நித்தியகல்யாணப்
பெருமாள் தேவஸ்தானம்,
பிரமாதி௵ சித்திரை௴ ௧
14—4—1939.

ப. முத்தைய பிள்ளை
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
ரா. ஆதிமூல நாயகர்

தருமகர்த்தர்கள்

2597
8137
ஸ1:38

ஸ்ரீ:

# ஸ்ரீ வராஹ புராணம் என்ற
# திருவிடவெந்தைப் புராணம்

இந்த திவ்யதேசத்துப் பட்டாசாரிய சுவாமிகளும் அத்யாபக சுவாமிகளும் பழைய பிரதியிலிருந்து சுருக்கி யெழுதியது

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: ...)

பதரிகாச்ரமத்தில் வியாஸர், வசிஷ்டர், கபிலர், சூதர், விச்வாமித்திரர், பராசரர், கௌசிகர், காலவர் முதலிய அநேக ரிஷிகள் ஒன்றுசேர்ந்து புலஸ்தியரைப் பார்த்து இவ்வுலகத்தில் க்ஷேத்ரங்களுக்குள் மிகவும் சிறந்ததான ஸ்ரீபுரம் என்று பிரஸித்தி பெற்ற வாமகவீபுரியின் மாஹாத்மியத்தை முன்பு ஸூதர்முகமாகச் சுருக்கமாய்க் கேட்டோம். இப்போது அதை விவரித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்க, புலஸ்தியர் கௌசிகரைப் பார்த்துச் சொல்லுகிறார் :—கேளுங்கள் மஹரிஷிகளே ! நான் ச்வேதத்வீபத்திற்கு முன்பு போயிருந்தேன். அங்கு ரிஷிகளும், தேவர்களும், யக்ஷர்களும் சொல்லிக்கொண்டிருந்த ஷெ புராணத்தைச் சொல்லுகிறேன். ஜம்பூத்வீபத்திலே ஸரஸ்வதி நதிக்கரையில் குனி என்று ஓர் ரிஷி இருந்தார். அவருக்கு சிச்ருஷை செய்வதற்கு ஓர் கன்னிகை உண்டானாள். இப்படி இருக்கும் காலையில் அந்தக் குனி என்னும் ரிஷி ஸ்வர்க்கலோகம் அடைந்தார். பிறகு அந்தக் கன்னிகை கடுந்தவம் புரிந்தாள். ஒரு நாள் நாரதர் அவளைப் பார்த்து “ஓ பெண்ணே ! நீ (அஸம்ஸ்க்ருதை) கல்யாணமாகாதவள் உனக்கு ஸ்வர்க்கம் கிடைக்காது” என்று சொல்லிப் போனார். உடனே அந்தக் கன்னிகை அங்குள்ள ரிஷிகளிடம் வந்து தன்னைக்கலியாணம் செய்து கொள்ளும்படி கேட்டாள். எல்லாரும் மறுக்கவே காலவ ரிஷியானவர் அவள் பிரார்த்தனையை ஒத்துக்கொண்டு அவளைக் கலியாணம் செய்துகொண்டார். ஒரு வருஷத்தில் அவளிடம் 360 கன்னிகைகள் ஸ்ரீபெரிய பிராட்டியார் அம்சமாக உண்டானார்கள். உடனே அந்தக் கன்னிகை ஸ்வர்க்கலோகம் போனாள். பிறகு அந்தக் காலவரிஷியானவர் அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்குச் சக்தியில்லாதவராய்க் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, ஸரஸ்வதிநதியில் தீர்த்தமாடுவதற்குப் பல ஊர்களிலிருந்தும் பிராமணர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்துக் காலவ ரிஷி தாம் குழந்தைகளுடன் கஷ்டப்படுவதைச்சொன்னார். உடனே அவர்களில் சிலர் “நீர் கஷ்டப்படவேண்டாம் ; நாங்களிருப்பது வாமகவீபுரி (திருவிடவெந்தை)நீர் குழந்தைகளுடன் அங்கு வந்தால் கஷ்டமில்லாமல் சுகமாக இருக்கலாம்” என்றார்கள். உடனே அவர்களுடன் கூடவே ரிஷியானவர் தம் குழந்தைகளுடன் புறப்பட்டுத் திருவல்லிக்கேணி வந்து அங்கு ஸ்ரீபார்த்தஸாரதியையும் நரசிங்கனையும் ஸேவித்து, மறுநாட் காலையில் அழகிய பல விருக்ஷங்களாலும்,

பரிசுத்தமான புண்ணிய தீர்த்தங்களாலும், அழகிய உப்பரிகைகளாலும் சிறந்து விளங்குவதும் யாகம்செய்கிற அநேக மஹரிஷிகளால் நிறைந்ததுமான திருவிடவெந்தைக்குவந்து அங்கு யக்ஞவிமானத்தின்கீழ்க் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீயக்ஞவராஹமூர்த்தியை வலம்வந்து ஸேவித்திருக்கையில் காலவரிஷியானவர், அங்குள்ள பிராமணர்களைப் பார்த்து வராஹரூபமாய் இங்கெழுந்தருளியுள்ள ஸ்ரீநாராயணன் எந்தக் காரணத்திற்காக யாருக்கு முன்பு இங்கு ஸேவைஸாதித்தார் என்று கேட்க, அதற்கு அங்குள்ள பிராமணர்கள் காலவமஹரிஷியைப் பார்த்து, "முன்பு மேஹநாதன் என்று ஓர் அஸுர ராஜனிருந்தான். அவனுக்குப் பலி என்று ஒரு பிள்ளை பிறந்தான். அந்தப் பலியானவன் நீதிமார்க்கமாய் ராஜ்ய பரிபாலனம் செய்து வரும்போது மாலி, மால்யவான், ஸுமாலி என்கிற மூன்று ராக்ஷஸர்கள் தேவர்களோடு யுத்தம் செய்யப் பலி என்கிற அஸுரனை ஸஹாயத்திற்குக் கூப்பிட்டார்கள். அதற்குப் பலியானவன் மறுக்கவே, ராக்ஷஸர்கள் தேவர்களோடு யுத்தம் செய்து தோற்றுப்போய் அப்பலியைச் சரணம் அடைந்தனர். அவர்க்காகப் பலியானவன் தேவர்களோடு யுத்தம்செய்தான். பிறகு தேவர்களோடு தான் யுத்தம் செய்த பாபம் ஒழிவதற்குப் பலியானவன் இந்த வராஹ தீர்த்தக் கரையில் கடுந்தவம் புரிந்து வந்தான். இவனுடைய கடுந்தபஸிற்கு ஸந்தோஷித்து, ஸ்ரீமந் நாராயணனும் வராஹகுளத்திலிருந்துதோன்றி இந்த வராஹரூபியாய் ஸேவைஸாதித்துப் பலியைப் பார்த்து "நீ செய்த தபஸினால் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு மோக்ஷம் உண்டாகட்டும். மேலும் இந்த வராஹதீர்த்தத்தில் எவன் மாசி மாதத்தில் தீர்த்தமாடுகிறானோ அவன் ஸ்வர்க்கமடைவான். இந்த ஊரில் ஒருவன் கொஞ்சமாகத் தானம் செய்தாலும் அது கோடிப்பங்கு அதிகமான பலனைக்கொடுக்கும். இங்கு யக்ஞங்கள் சிரார்த்தங்கள் இன்னும் எவ்விதமான விசேஷ காரியங்கள் செய்தாலும் அவை எவ்வித லோபத்தை உடையவாயினும் பூரணமான பலனைக் கொடுக்கும். இங்குள்ள கல்யாணதீர்த்தத்தில் சித்திரை மாதத்தில் ஒருவன் ஸ்நானம்செய்தால் அவன் பாபத்திலிருந்து விடுபடுகிறான்; மோக்ஷமடைகிறான். இதேமாதிரியாக இங்கு இன்னும் அநேக தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளும் அப்படியே பலனைத் தரும். என்னை இவ்வூரில் இருந்து ஒருதரம் எவன் நினைத்தாலும் அவன் நல்ல லோகத்தை அடைவன். இவ்வூரில் ஒருநாள் வாசம் செய்தால் அவனுக்கு மோக்ஷமுண்டு" என்றுசொல்லி எம்பெருமான் இந்த ரூபத்தோடிங்கேயே இருந்துவிட்டார் என்று சொன்னார்கள்.

பிறகு காலவரிஷியும் பிரதிதினம் எம்பெருமானை ஸேவித்துக்கொண்டு சுகமாக இருந்துவரும் நாளில் கன்னிகைகளுக்குத் தகுந்த வரன் கிடைக்கவேண்டுமே என்று அதிகக் கவலையுடனிருந்தார். இப்படி இருக்கும்போது ஸ்ரீமந் நாராயணன் ஒரு பிரமசாரி வேஷம்

பூண்டு அங்கு வந்தார். அவரைப் பார்த்துக் காலவரிஷி, "பிரம சாரியே, உமக்கு எந்த ஊர்? உமது கோத்திரமென்ன?" என்று கேட்க, பிரமசாரியும் "நான் திவ்ய தேச யாத்திரையாக இங்கு வந்தேன். நான், காச்யப கோத்திரம்" என்முன். உடனே ரிஷியானவர் எனக்கு 360 கன்னிகைகள் இருக்கிறார்கள். வயது வந்தவர்கள்; மிக அழகுள்ளவர்கள். தேவரீர் கிருபை செய்து அவர்களைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்" என்று வேண்டினார். அதற்குப் பிரமசாரியும் சம்மதித்து தினம் ஒரு கன்னிகையாக ஒரு வருஷம் கல்யாணம் செய்துகொண்டு கடைசித் தினத்தில் எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே எல்லாக்கன்னிகைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்து ஒரு கன்னிகையாகச் செய்து தன்னுடைய இடது பக்கத்தில் வைத்துக்கொண்டு வராஹரூபியாக ஸேவை ஸாதித்து அந்த நாச்சியார்முகமாக எல்லாருக்கும் ஞான உபதேசம் செய்தார். 360 கன்னிகையரும் ஒருங்கே சேர்ந்து ஒருருவானபடியால் ஸ்ரீ வராஹமூர்த்தியின் இடப்பாகத்தில் உள்ள நாச்சியாருக்கு அகிலவல்லி நாச்சியார் என்ற திருநாமம் ஏற்பட்டது. ஒரு வருஷமளவும் பிரதிதினம் கல்யாணம் செய்துகொண்டபடியால் நித்யகல்யாணப் பெருமாள் என்று மறுதிருநாமமும் ஏற்பட்டது. பெருமாளுடைய க்ஷேத்ரமாகையால் **நித்யகல்யாணபுரி** என்று ஊருக்கு மறுபெயரும், பெரிய பிராட்டியார் அவதாரம் செய்து வளர்ந்த இடமானதால் **ஸ்ரீபுரி** என்ற பெயரும், வராஹரூபமாக ஸேவைஸாதிக்கிறபடியால் **வராஹபுரி** என்ற பெயரும் ஏற்பட்டன. அந்த 360 கன்னிகைகளில் முதல் கன்னிகைக்குக் கோமளவல்லி என்று பெயர் ஆகையால் இங்கு தனிக்கோயிலிலுள்ள தாயாருக்கும் கோமளவல்லி நாச்சியார் என்று திருநாமமும் ஏற்பட்டது.

பிராட்டியை இடது பக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பதால் திருஇடவெந்தை என்று வழங்கிய இந்தத் திவ்யதேசத்திருநாமம் சிலாசாசனத்தில் அசுரகுலகாலநல்லூர் என்றும் காணப்படுகிறது. பெருமாள் திருநாமங்கள் ஆதிவராஹப்பெருமாள், நித்யகல்யாணப் பெருமாள்; தாயார் திருநாமங்கள் கோமளவல்லி நாச்சியார், அகிலவல்லித் தாயார்; கோயில் விமானம் - கல்யாண விமானம், யக்ஞவிமானம்; தீர்த்தங்கள் கல்யாணபுஷ்கரிணி, வராஹபுஷ்கரிணி முதலிய பதினொந்துள்ளன. கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ஒரு திருவடி பூமியிலும் மற்றொன்று ஆதி சேஷனும் அவன் பத்தினியுமாகிய இருவர் முடியிலும் வைத்துக் கொண்டும், இடது பக்கத் திருத்தொடையில் அகிலவல்லி நாச்சியாரை வைத்துக்கொண்டும் வராஹமூர்த்தி சரமஸ்லோகத்தை உபதேசிக்கும் கிரமமாக சேவை சாதித்தருளுகிறார். பலி என்ற அஸுர ராஜனுக்கும், காலவ ரிஷிக்கும், மார்க்கண்டேயருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

## திருவிடவேந்தை ஸ்ரீ நித்யகல்யாணப் பெருமாள் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள்

[மயிலைகிழார் இளமுருகனார்]

இக்கோயில் மிகப்பழமையானது. கோயில் உட்சுவர்களிற் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை பழைய சோழ அரசர்கள் காலத்தில் ஏற்பட்டவை. அக்காலத்தில் நடைபெற்ற திருவிழாக்கள் திருநக்ஷத்திரங்கள், ததியாராதனை முதலியவற்றின் குறிப்புக்களை அவற்றில் காணலாம். அரசாங்கத்துக் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் அக்கல்வெட்டுக்களைப் பதிவுசெய்து கொண்டு தங்கள் 1910ஆத்திய அறிக்கையில் 258-283ம் என்று எண்ணிட்டு அக்கல்வெட்டுக்களின் தாற்பரியத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வதிகாரிகள் அன்பு கூர்ந்தளித்த அனுமதியின் பேரில் அவர்கள் பதிவு செய்து வைத்திருக்கும் பிரதிகளைப் பார்வையிட்டும் கோயிலிலுள்ள கல்வெட்டு மூலங்களைப் பார்வையிட்டும் ஒப்பிட்டு அவற்றின் சாராமிசத்தைக் கீழே தருகிறோம்:—

**திருவிடவேந்தை கிராமம் தானம் செய்யப்பட்டது :—** ஜெயங் கொண்ட சோழமண்டலத்துக் கலியாணபுரங் கொண்ட சோழ கோட்டத்துப் படுவூர்நாட்டுத் திருவிடவெந்தை தேவர்க்கு நித்திய சிறப்புக்கும்......நாம் பிறந்த பூரநாளால் திங்கள் தோறும் திருவிழாவுள்ளிட்டு வேண்டும் நிபந்தங்களுக்கு......யாண்டு முப்பத்தைந்தாவது முதல்தேவதான இறையிலியாக......கொடுக்கவென்று திருவாய் மொழிந்தருளினானென்று திருமந்திரவோலை......(விஜய ராஜேந்திரதேவ சோழன் 35-வது ஆட்சி ஆண்டில், அதாவது கி. பி. 1052-ல் அவ்வரசனால் திருவிடவெந்தை கிராமம் பெருமாளுக்குத் தேவதானமாகத் தரப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இன்றைக்கும் இக்கிராமம் பெருமாளுக்கே சொந்தமானது.—S. I- I. 258 of 1910.

**திருவிடவேந்தையில் பங்குனி உத்திரத்திலிருந்து ஒன்பது நாள் திருவிழா நடந்தது:—** இது, முதல் ராஜராஜ சோழன் காலத்தவான இரண்டு கல்வெட்டுகளாலறியப்படுகின்றது. திருவொற்றியூர் வணிகர் அதிகை உத்தம செட்டியார் தையூர்க் கிராமத்தாருக்கு முப்பது கழஞ்சு பொன் மூலதனமாகக் கொடுத்துப் ' படுவூர் நாட்டுத் திருவிடவெந்தை ஸ்ரீவராகதேவர்க்கு திருநந்தா விளக்கு ஒன்றுக்கும்......பங்குனி உத்திரத்திருநாள் ஆதியாக திருவிழா ஒன்பது நாளும் நித்தம் முப்பத்தைந்து பிராமணரை ஊட்டும்படிக்கும்" ஏற்பாடு செய்ததை அச்சோழன் 19-வது ஆண்டுக்கல்வெட்டு (கி. பி. 1003) கூறுகிறது S.I.I. 267 of 1910. இதே சோழன் 29-வது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு (கி. பி. 1013) அத்திருநாளுக்குப் பிராமண போஜனத்துக்கு வேறொருவர் செய்த மூலதன நன்கொடையைக் குறிக்கிறது S I.I. 260 of 1910.

**ஆவணிச் சதயம் ஈறுக ஏழு நாள் விழா** :—ராஜராஜ சோழ தேவர் 17-வது ஆட்சி யாண்டில் (கி. பி. 1001) அவ்வரசர் பிறந்த நாளாகிய ஆவணிச் சதயத்தை ஈறுகக்கொண்டு ஏழு நாட்கள் திருவிழா, திருமஞ்சனம், திருப்பாவாடை முதலியன சிறப்பாக செய்விக்கும்படி அவ்வரசர் கட்டளையிட்ட செய்தியை (S. I. I. 274 of 1910) ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE:

**கும்ப ஞாயிறு முழுமையும் விசேஷம்** :—கும்பராசியில் சூரியன் தங்குகின்ற மாசி மாதம் முழுமையும் இவ்வராஹ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் ஸ்வர்க்கம் கிடைக்கும் என்று அசுரராஜனுகிய பலிக்கு ஸ்ரீவராஹப்பெருமாள் வரமளித்துள்ளார். அக்காலத்தில் பலர் ஸ்நானம் செய்வதற்காக யாத்திரையாக வந்து தங்கி யிருந்தார்கள். கும்ப ஞாயிறு முப்பது நாளும் பிராமண போஜனத்துக்கு மூலதனம் கொடுத்த செய்தியை ராஜராஜசோழர் 19-வது ஆட்சி யாண்டின் (கி. பி. 1003) கல்வெட்டொன்று (S. I. I. 273 of 1910) தெரிவிக்கின்றது.

**திருவிடவெந்தையில் கலிச்சிங்கன் மடம் இருந்தது** :—திருமங்கையாழ்வார்பெயரால் **கலிச்சிங்கன் மடம்** என்றொரு மடம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அம்மடத்தில் அமாவாசை தோறும் பிராமண போஜனம் நடந்த செய்தியைக் குலோத்துங்க தேவர் 45-வது ஆட்சி யாண்டின் கல்வெட்டு ஒன்று (கி. பி. 1115) தெரிவிக்கின்றது (281 of 1910).

**வேறு பல கல்வெட்டுக்கள்** :—இவற்றின் மூலம், திருநந்தா விளக்குகளுக்கு மூலதனம் தரப்பட்டது, மார்கழி ஏகாதசித் திருநாளில் திருவாராதனை செய்விக்கப்பட்டது, அமாவாசைகளில் அபூர்விகளுக்கு அன்னமளிக்கப்பட்டது, ஸ்ரீ வராஹநாயனருக்கும் நாச்சியாருக்கும் திருவொத்த சாமச்சந்திக்குத் திருவமுது செய்விக்க நிலம் விடப்பட்டது, தையூரிலிருந்த இரண்டு பிராமணர்கள் மணவாளப்பெருமாள் விக்ரஹத்தைத் தானமாகக் கொடுத்துப் பூசிக்கச் செய்தது, திருவிடவெந்தைக்கு அசுரகுலகால நல்லூர் என்ற பெயர் வழங்கியது, மலையாளத்திலிருந்து யாத்திரையாக வந்த சில வியாபாரிகள் தீப கைங்கரியத்துக்காகப் பொன்னளித்தது முதலிய பல செய்திகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக்களின் காலம் கி.பி. பத்தாவது நூற்றுண்டு முதல் பதினன்காவது நூற்றுண்டின் இறுதி வரையுள்ள 500 வருடங்களாகும். இவை ஸ்ரீ ஆதிவராகப்பெருமாள் கருப்பக்கிரகத்தின் சுவர்களிலும், எதிரிலுள்ள மண்டபத்தின் சுவர்களிலும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களின் முழு விபரங்களையும் அறிய விரும்புவோர் ஷை சுவர்களிலுள்ளவற்றைப் படியெடுத்துப் பரிசோதித்தும் மயிலாப்பூர்க் கச்சேரி வீதியிலுள்ள கல்வெட்டிலாகா தலைமையாபீசுக்கு (Superintendent for Epigraphy, Southern Circle) மனுவனுப்பியும் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ:

# திருமங்கையாழ்வார்

ராவ்சாஹேப் - வித்வான் மு. இராகவையங்கார் சுவாமிகள் எழுதியது

**ஸ்ரீய:** பதியான ஸர்வேஸ்வரனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மருள் பிற்பட்டவரான திருமங்கையாழ்வார், சோழமண்டலத்துத் திருவாலி நாட்டில், திருமங்கை என்ற ஊரில் கள்வர்குலத்தில் அவதரித்தவர். அவ்வாலி நாட்டின் தலைவராய் அறிவாலும் வீரத்தாலும் சிறந்து, அரசனான சோழனாற் பெரிதும் அபிமானிக்கப்பெற்று, அவனுடைய சேனாபதியாகி அரிய பல தொண்டுகள் புரிந்து புகழ்பெற்றார். இவர், குமுதவல்லி என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்து, அவள் விருப்பின்படி பகவத் பாகவத ஆராதனைகளில், தம் பொருளைமட்டுமன்றி, அரசாங்க வருவாயையும் செலவிட்டு, அதனால் அரசனது சீற்றத்துக்கு ஆளாகிச் சிலகாலம் வருந்தினர். அக்காலத்தில் கைப்பொருளின்றி இவர்க்கு வறுமை நேரவே, தாம் மேற்கொண்ட கைங்கரியங்களை நடத்துவதற்கு வேறு வழியின்றி,கொள்ளைகொண்டேனும் அதனை நடத்தத் துணிந்து தம் பரிவாரங்களுடன் வழிப்பறியில் இவர் முனைந்து நின்றபோது,எம்பெருமான் இவரை ஆட்கொளத் திருவுளங்கொண்டு ஒரு மணவாளப்பிள்ளையின் கோலமாய் மனைவி சுற்றங்களுடன் ஸர்வாபரண பூஷிதராய் இவரெதிரில் எழுந்தருள, இவர் அவர்களைக் கண்டு களித்து ஆயுதபாணியாய்த் தம் இனத்துடன்சென்று அம்மணமக்களை வளைந்துகொண்டு அவர்களிடமுள்ள ஆபரணாதிகளையெல்லாம் அபகரித்தனர். அப்போது, மணமகன் காலில் அணிந்திருந்த விரலாழிபொன்றுமட்டும் கழற்றமுடியாமற்போக,அதனையும் கவர்தற்குத் தம் பற்களால் அதனைக் கடித்துவாங்கும்போது, இவர் செவியில் மணவாளக் கோலத்தவனாய் வந்த எம்பெருமான் திருமந்திரத்தை உபதேசித்தருள, அதனால் இவர் ஞானோதயம் பெற்று "கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன் கண்டவா திரிதந்தேனேலும், தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன் சிக்கெனத் திருவருள் பெற்றேன்" என்றவாறு, பலபடியாக அவனது பரமகிருபையை நினைந்து உருகினர். உடனே மணவாளக் கோலங்கொண்ட பெருமான் தம்பரிசனங்களுடன் மறைய,அதுமுதலாக இவர் அப்பெருமானிடம் பிரேமாதிசயங் கொண்டவராய், நாடெங்கும் சஞ்சரித்து அங்கங்குள்ள எம்பெருமான்களையெல்லாம் மங்களாசாசனம் பண்ணலாயினர். முடிவில், திருக்குறுங்குடியில் வாழ்ந்து அங்கே பரமபதம் அடைந்தனர்.பரகாலன், கலியன், நீலன் என்பன இவர்க்கு வழங்குந் திருநாமங்கள்.வீரப்பெருமையோடு,பெருந்தமிழ்ப் புலமையாலும்சிறந்து விளங்கியவர் இவ்வாழ்வார்.இவர் திருவாக்குமுழுதும் செந்திறத்த தமிழோசை நயமும், சொல்வளம் பொருள்வளங்களும் நிரம்பியது.

இவ்வாழ்வார் பாடியருளிய திவ்யப் பிரபந்தங்கள் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என ஆறுகும். இவ் ஆறும் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோன், ஆறங்கமாக' அருளிச் செய்தவை என்பர் பெரியோர். மற்றும் இவ்வாழ்வாரது வைபவங்களைக் குருபரம்பரை முதலிய நூல்களிற் பரக்கக் கண்டுகொள்க.

நெஞ்சுக் கிருள்கடி தீபம் அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம் தமிழநன் னூற்றுறைகள்
அஞ்சுக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே.

---

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாய நம :

# திருவிடவெந்தை எம்பெருமான்

ராவ்சாஹேப் வித்வான் மு. இராகவையங்கார் சுவாமிகள் எழுதியது

**ஸ்ரீய :** பதியாய் அவாப்தஸமஸ்தகாமனும் அநந்த கல்யாண குணபூர்ணனுன ஸர்வேஸ்வரன் இந்த லீலாவிபூதியில் உள்ளார் உய்யும் வண்ணம் அர்ச்சாவதாரங் கொண்டு எழுந்தருளியுள்ள திவ்யதேசங்கள், மண்ணில் அரங்கமுதல் வைகுந்த நாடளவும், எண்ணு திருப்பதி நூற்றெட்டு ஆகும். இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளும், திருமாலடியார்களான ஆழ்வார்களால் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்ற பெருமை வாய்ந்தவை என்பதும், அதுபற்றி ஸ்ரீ வைஷ்ணவலோகத்தால் பெரிதுஞ் சிறப்பித்துப் போற்றப்படுவன என்பதும் அறியாதாரில்லை. இத்தகைய ஸ்தலங்களிலே, தொண்டை நாட்டுள்ள 22 திருப்பதிகளில் **திருவிடவேந்தை** என்பதும் ஒன்று. இத்திருப்பதி எம்பெருமான், திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்றவர். இந்தத் திவ்யதேசம், காஞ்சிக்குக் கிழக்கே கடற்கரையில்,மாவலிபுரத்தின் சமீபத்து அமைந்து, மிக ரமணீயமான சந்நிவேசமுடையதாக விளங்குவது. இங்கே திருக்கோயில் கொண்டருளும் பெருமான், நிலம் கோட்டிடைக் கொண்ட ஞானப்பிரான் ஆன ஸ்ரீவராகமூர்த்தியாவர். ஆதிசேஷனுல் தாங்கப்பெற்ற இடப்பக்கத்து பூமிப்பிராட்டியை ஏந்திய வண்ணம், இவ்வெம்பெருமான் அளித்தருளும் அற்புதக்காட்சி பக்தகோடிகட்கெல்லாம் பேரானந்தம் அளிப்பதாகும். இவ்வாறு பெருமான் இடப்பக்கமாகப் பிராட்டியை ஏற்றுள்ள தலமாதல்

பற்றியே, திருவிடவெந்தை என்ற திருநாமம், இதற்கு வழங்குவதாயிற்று. மாவலிபுரம் என வழங்கும் திருக்கடன்மல்லையிலும் வராகமூர்த்தியின் திருக்கோயில் ஒன்று உள்ளது. அம்மூர்த்தி, வலக்கொம்பில் அப்பிராட்டியைத் தாங்கியவராய் எழுந்தருளியிருத்தலால், 'திருவலவெந்தை' என்று அத்தலத்துக்குத் திருநாமம் அமைந்த தென்பர்.*

இத்திருவிடவெந்தை எம்பெருமானிடம் திருமங்கை மன்னனுக்குள்ள ஈடுபாடு ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்றே சொல்லலாம். இத் திருப்பதி விஷயமாக இவ்வாழ்வார் அருளிய திருப்பதிகத்திலிருந்து இவர்க்கிருந்த அபிநிவேசத்தின் பெருமை அறியக்கூடியதாகின்றது. 'அரட்டமுக்கி அடையார் சீயம்' ஆன இவ்வாழ்வார், தம் பேராண்மைத்தனத்தை இழந்து ஒரு பெண்ணின் தன்மையை அடைந்து அனுபவித்த திருக்கோயில மூர்த்திகள் பலர். அவ்வாறு அனுபவிக்கும்போது, தாய் தோழி தலைவி என்ற இம்மூவருள் ஒருவரின் தன்மையைத் தாமடைந்து கூற்றுநிகழ்த்துவதை, இவரருளிச் செயல்களிலே பல

---

*திருக்கடன்மல்லையில் ஹரிசேகர சக்ரவர்த்தி என்ற அரசன் தினந்தோறும் உச்சிக்காலத்தில் திருவிடவெந்தை நித்தியகல்யாண ஆதிவராஹமூர்த்தியைச் சேவித்துவிட்டு ஊருக்கு வந்து திருவாராதனை முடித்த பிறகு உண்ணுவது வழக்கம். ஒரு நாள் ஸ்ரீவராஹமூர்த்தி இவ்வரசனது பக்தியை உலகத்தாருக்கு அறிவிப்பதற்காகத் தாமே திருவிடவெந்தையிலிருந்து பூமிப்பிராட்டியாரைச் சிறுபெண்ணாக அழைத்துக்கொண்டு ஒரு கிழப்பிராமண ரூபத்தோடு திருக்கடன்மல்லைக் கெழுந்தருளி, அரசன் திருவிடவெந்தைக்குப் புறப்படும் வேளையில் அவனெதிர் சென்று பசிக்கு உணவுதரும்படி கேட்டார். அரசன், தான் திருவிடவெந்தை சென்று மீண்டு வந்தவுடன் வேண்டுவன தருவதாக எவ்வளவு சமாதானம் கூறியும் கேளாமையால் அக்கிழப்பிராமணரையே ஸ்ரீவராகமூர்த்தியாகப் பாவித்து உபசரித்து அரசன் ஆராதனை சமர்ப்பித்தான். உடனே அவன் பக்திக்கு மெச்சி ஸ்ரீவராகமூர்த்தியானவர் பூமிப்பிராட்டியாரைத் தமது வலதுபுறத்தில் வைத்துக் காட்சிகொடுத்து ஞானோபதேசம் செய்தார். இவரே திருக்கடன்மல்லையில் ஞானப்பிரானாக விளங்குகிறார். இவ்வரலாற்றை

"ஏனத்தி னுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ளக்
கானத்தின் கடன்மல்லைத் தலசயனத் துறைகின்ற
ஞானத்தி னொளியுருவை நினைவார்என் னாயகரே"

என்று திருமங்கையாழ்வார் தமது திருக்கடன்மல்லைப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளமை அறியத்தக்கது.

விடத்துங் காணலாம். இத் திருவிடவெந்தைக்கு அவ்வாறமைந்த பதிகம் தாய்கூற்ருனது. 'தாய் எனப்படுவோள் செவிலியாகும்'. இவ்வாறு, செவிலியின் கூற்ருக அமைந்துள்ள இப்பாசுரங்களின் போக்கால், அத்தாயினிலையில் திருமங்கையாரையும், பெண்ணிலையில் அவரல்லாத வேருெரு தலைவியையும் கொண்டு பாடப்பட்டது இத்திருப்பதிகம் என்று கொள்வது பொருத்தமன்று. மற்று, இங்குத் தாய் நிலையில் உள்ளது, ஆழ்வாருடைய அந்தக்கரணங்களுள் ஒன்ருன நெஞ்சம் அல்லது மனஸ்ஸே என உணர்க. ஸ்வாபதேசத்தில், புத்தி சித்தம் அகங்காரங்களைத் தோழி அறிவர் பாணன் முதலிய வாயில்களாகச்கொள்ளத்தகும். ஆகவே, அந்த அந்தக்கரணங்களின் வேறுபட்ட ஜீவாத்மாவாகிய ஆழ்வார்தாமே இங்குத் தலைவியாகக்கூறப்பட்டவள் என உணர்க. "யாரிருக்கினு மென்னெஞ்சமல்லதொரு வஞ்சமற்ற துணையில்லை" என்பது போன்ற இடங்கள் இக்கருத்திற்ருனே சிறிதுவேறுபடக் கூறப்பட்டவை. ஆகவே, பெண்ணின்நிலைமை அடைந்து உள்ளமுருகியவர், திருமங்கைமன்னனுகிய தலைவியேயன்றி வேறு தலைவியாகாள்என்பதுதெரியலாம். இவ்வாறு, திருமங்கை மன்னனது அந்தக்கரணங்களில் ஒன்ருன நெஞ்சச் செவிலியானவள், பெருமானது அநந்தகல்யாண குணங்களில் ஆழ்ந்திடுபட்டு அவனை யடைந்தல்லது தரிக்கலாத அவ்வாழ்வாராகிற தன் பெண்ணின் தளர்நிலைக்கிரங்கி, "இப்படிப்பட்ட தலைவி விஷயத்தில் உன் திருவுளத்தாற்செய்ய நினைந்திருப்பது என்னே? அருளிச்செய்யவேண்டும்" என்று, இனிமையும் உருக்கமுமான வசனங்களால் அவ்வெம்பெருமானை நோக்கிக் கூறும் இத்திருப்பதிகம் படிக்கப் படிக்க அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாகும். அத்திருப்பதிகம் வருமாறு:—

### பெரிய திருமொழி - 2-ம் பத்து 7-ம் திருமொழி

### "திவளும் வெண்மதிபோல்"

திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை
செழுங்கட லமுதினிற் பிறந்த
அவளும்நின் ஆகத் திருப்பது மறிந்தும்
ஆகிலும் ஆசைவி டாளால்
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லுநின் தாள்நயந் திருந்த
இவளையுன் மனத்தால் என்னினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே! (க)

(உரை) இடவெந்தை எந்தை பிரானே - திருவிடவெந்தையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! திவளும் வெண்மதிபோல் -

பிரகாசிக்கின்ற வெண்மையான சந்திரன்போன்ற, திருமுகத்து - அழகிய முகத்தையுடையவளும், அரிவை - இளம்பருவ முள்ளவளும், செழுங்கடல் அமுதினில் பிறந்த - செழிப்புள்ள கடலில் அமிர்தத்துடன் பிறந்தவளுமான, அவளும் - அந்தப் பெரியபிராட்டியாரும், நின் ஆகத்து - உனது திருமார்பிலே, இருப்பதும் அறிந்தும் ஆகிலும் - தங்கியிருப்பதை அறிந்தவளானாலும், ஆசைவிடாள் - உன்னிடம் பிரேமையை விடாதவளாயிருக்கிறாள். குவளை அம் கண்ணி - நீலோற்பலம்போலும் அழகிய கண்களை உடையவளும், கொல்லி அம்பாவை - கொல்லிமலைப் பதுமைபோன்றவளும், நின்தாள் நயந்திருந்த - உன் திருவடிகளையே விரும்பியுள்ளவளுமான, இவளை - இப்பெண் விஷயத்திலே, உன் மனத்தால் என் நினைந்திருந்தாய் - உன்னுடைய திருவுளத்தால் என்ன செய்வதாக நினைத்திருக்கிறாய், சொல்லு - அருளிச் செய்யவேணும்.

குறிப்பு :—முன்னமே, ஓர் அழகிய பெண்ணினிடம் காதல் கொண்டு அவளை விடாமல் உடன்கொண்டிருப்பவன் நீ என்பதை அறிந்தும், என் பெண் உன்னை இடைவிடாது விரும்புகின்றாள், நின் குறிப்பு கொள்ளுவதோ தள்ளுவதோ எது? கூறுக என்றபடி. கொல்லிப்பாவை - கொல்லிமலையில் தேவநிர்மாணமாய்க் கண்டாரை மோகிக்கச் செய்து அன்புறுத்திவந்த ஒரு பெண்பதுமை.(1)

துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்
  துணைமுலை சாந்துகொண் டணியாள்
குளம்படு குவளைக் கண்ணிணை யெழுதாள்
  கோலநன் மலர்குழற் கணியாள்
வளம்படு முந்நீர் வையமன் றளந்த
  மாலென்னும் மாவினம் ஒழியாள்
இளம்படி இவளுக் கென்னினைந் திருந்தாய்
  இடவெந்தை எந்தை பிரானே. (உ)

(உரை) இடவெந்தை எந்தைபிரானே! துளம் படு முறுவல் - மாதுளை விதைபோன்ற பற்களினின்று உண்டாம் புன்சிரிப்பை, தோழியர்க்கு அருளாள் - தன் உடனொத்த பாங்கியர்முன்பு காட்டி உவப்பிக்கின்றாள் இல்லை, துணைமுலை சாந்துகொண்டு அணியாள் - தன் இருதனபாரங்களைச் சந்தனத்தால் அணிகின்றாளில்லை, குளம்படு குவளைக் கண்ணிணை எழுதாள் - நீர் நிலையில் செவ்வி கெடாதுள்ள நீலோற்பலமலர் போன்ற கண்களை மையிட்டெழுதி அலங்கரித்தனளில்லை, குழற்கு கோலம் நல்மலர் அணியாள் - கூந்தலில் அழகான ஸுகந்த புஷ்பங்களைச் சூட்டிக் கொள்கின்றாளில்லை, வளம்படு முந்நீர் வையம் - மணிமுதலிய திரவியவளங் கொண்ட கடல் சூழ்ந்த பூமியை, அன்றளந்த மால் என்னும் -

மகாபலியிடம் நீரேற்ற அன்று அளந்துகொண்ட திருமால் என்கிறாள், மால் இன்னம் ஒழியாள் - தன் வியாமோகத்தை நீ புறக்கணித்தும் ஒழிந்திலள், இளம்படி இவளுக்கு என் நினைந்திருந் தாய் - மிருதுத்தன்மையளான இவள்திறத்தில் என்ன செய்வதாக உன் திருவுள்ளம்.

குறிப்பு :—மாதுளம் என்பது முதற் குறையாய் துளம் என நின்றது. துளம் - உவமையாகு பெயர். முந்நீர் - ஆற்றுநீர், ஊற்று நீர், வேற்றுநீர்என மூன்றுநீருடைய கடல். மால் இனம்மொழியாள் என்பதற்கு தன்னுடைய வியாமோகத்துக்குத் தகுதியான பேச்சு டையவள் எனினும் அமையும். (2)

சாந்தமும் பூணுஞ் சந்தனக் குழம்பும்
தடமுலைக் கணியிலுந் தழலாம்
போந்தவெண் திங்கள் கதிர்சுட மெலியும்
பொருகடல் புலம்பினும் புலம்பும்
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னும்
வளைகளும் இறைநிலா என்தன்
ஏந்திழை யிவளுக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே. (௩)

(உரை) இடவெந்தை எந்தை பிரானே! சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் - (குளிர்ச்சி தரும்படி) கலவைச் சந்தனத்தையும் வடப்பூணையும் குழம்புச் சந்தனத்தையும், தடமுலைக்கு அணியிலும் தழல்ஆம் - இவளது பெரிய தனங்களில் அணிந்தாலும் அவையாவும் நெருப்பாகா நின்றன. போந்த வெண் திங்கள் - வெளிவந்து தோன் றும் வெண்மையான சந்திரனது, கதிர்சுட மெலியும் - கிரணங்கள் தீப்போலத் தகித்தலால் உடல் மெலிந்து வருந்துகின்றாள், பொரு கடல் புலம்பினும் புலம்பும் - அலையெறியும் சமுத்திரம் கோஷித்தா லும் வாய்விட்டுக் கூவுகின்றாள், மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னும் - மாவின் தளிர்போன்ற இவளது இயற்கை நிறமும் பசலையாக மாறியது, வளைகளும் இறை நில்லா - வளையல்களும் முன் கையில் நிற்காதபடி கழல்கின்றன, என் தன் ஏந்திழை இவளுக்கு - என் பெண்பிள்ளையான இவள் விஷயத்தில், என் நினைந்திருந் தாய் - என்ன செய்வதாகத் திருவுள்ளம்.

குறிப்பு :—சாந்தம் - குழம்பல்லாத கலவைச் சந்தனம் என்க. பொன் - விரக காலத்தில் மாதர்கள் மேனியில் தோன்றும் பசலை நிறம். வளைகளும் இறைநில்லா என்பதற்குக் கையில் வளையல்களும் க்ஷணப்பொழுதும் தங்குகின்றில எனினும் அமையும். கைகள் துரும்பாக இளைத்தமையே, அவை நில்லாமைக்குக் காரணம். (3)

தக்கவள் என்பது பெறும்படி, இவளது அவயவ ஸௌந்தரியம் தாயாற் சிறப்பிக்கப் பட்டதென்க. (6)

உளங்கனிந் திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி எனக்கன்பொன் றிலாளால்
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ் சோலை
மாயனே ! என்றுவாய் வெருவும்
களங்கனி முறுவற் காரிகை பெரிது
கவலையோ டவலஞ் சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தைபிரானே ! (எ)

(உரை) இடவெந்தை எந்தைபிரானே ! உளம் கனிந்திருக்கும்-நெஞ்சம் கனிவுடையளாயிருக்கிறாள்,உன்னையே பிதற்றும்-உன்னினைவாகவே வாய்பிதற்றா நின்றாள், உனக்கன்றி எனக்கு அன்பொன்று இலள் - உன் விஷயத்தில் தவிர என்பால் அன்பு சிறிதும் உடையவள் அல்லள், வளம் கனி பொழில் சூழ் - செழிப்பானது முதிர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்த, மாயனே என்று வாய் வெருவும் - திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியுள்ள மாயவனே என்று வாய்பிதற்றா நின்றாள், களம் கனி முறுவல் காரிகை - களாப்பழம் போலும் புன்னகையையும் அழகையும் உடையவளாயும்,பெரிது கவலையோடு அவலஞ்சேர்ந்திருந்த-மிக்க மனக்கவலையையும் உடல் மெலிவையும் அடைந்தவளாயும் உள்ள, இளம்கன்னி இவளுக்கு - இளமை பொருந்திய கன்னியாகிய இம்மகள் திறத்திலே, என் நினைந்திருந்தாய்?

குறிப்பு :—'அவலக் கவலை கையா றழுங்கல்' என்பாராதலால் அவலம் உடன்மெலிவும் கவலை உண்மெலிவுமாகக் கொள்ளத்தக்கன. கன்னி - கனி எனத் தொகுத்தல் விகாரம். இளமையான கனிபோல் உன்னால் அநுபவிக்கத்தக்கவள் எனினும் ஆம். (7)

அலங்கெழு தடக்கை யாயன்வா யாம்பற்கு
அழியுமால் என்னுள்ளம் என்னும்
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
போதுமோ நீர்மலைக் கென்னும்
குலங்கெழு கொல்லிக் கோமள வல்லி
கொடியிடை நெடுமழைக் கண்ணி
இலங்கெழில் தோளிக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே ! (அ)

(உரை) இடவெந்தை எந்தை பிரானே! அலம்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு என் உள்ளம் அழியும் என்னும் - கலப்பை யொடு கூடிய பெரிய கையையுடையனான இடைமகன் தன் வாயில் வைத்து ஊதும் ஆம்பற்குழலின் இன்னிசைக்கு என் நெஞ்சம் அழி கின்றது என்கிறாள், புலம்கெழு பொருநீர் புட்குழி பாடும் - மனோ கரமான அலையெறிகின்ற நீர்ப்பெருக்குள்ள திருப்புட்குழி விஷய மாகப் பாட்டுக்கள் பாடுகின்றாள். நீர் மலைக்குப்போதுமோ என்னும்- திருநீர்மலைக்குப் போவோமோ என்கிறாள், குலம்கெழு கொல்லிக் கோமளவல்லி - சிறப்புடைய கொல்லிமலையிலுள்ள அழகிய பாவை போன்றவளும், கொடிஇடை நெடு மழைக் கண்ணி - வஞ்சிக்கொடி போன்ற இடையையும் பெருமழைபோல நீர்த்தாரைகள் ஒழுகும் கண்களையும், இலங்கு எழில் தோளிக்கு - விளங்குகின்ற அழகிய தோள்களையும் உடைய, இப்பெண்ணின் திறத்திலே, என் நினைந் திருந்தாய்?

குறிப்பு :—ஆயன், கண்ணபிரான் என்றும், இடைமகன் என் றும் இருவகையாகவும் கொள்ளலாகும். ஆம்பல் - கோவலர் ஊதும் இலைக்குழல் என்றும், 'குமுத வடிவாக அணைசு பண்ணிச் செறித்த ஓர் இசைக்குழல்' (சிலப். 17, பாட்டு 2, உரை) என்றும் கூறுவர். திருப்புட்குழி என்பது, புள்ளை (ஜடாயுவை)க் குழியிலிட்டு ஸம்ஸ் கரித்த அவஸரமாக எம்பெருமான் கோயில் கொண்டுள்ள திருப்பதி. திருநீர்மலை - திருமங்கை மன்னனால் விசேஷமாக அபிமானிக்கப் பட்ட தலம். இவ்விரண்டும் தொண்டை நாட்டிலுள்ளவை. (8)

பொன்குலாம் பயலை பூத்தன மென்றோள்
  பொருகயற் கண்டுயில் மறந்தாள்
அன்பினா லுன்மே லாதரம் பெரிதிவ்
  வணங்கினுக் குற்றநோ யறியேன்
மின்குலா மருங்குல் சுருங்கமேல் நெருங்கி
  வீங்கிய வனமுலை யாளுக்கு
என்கொலாம் குறிப்பில் என்னினைந் திருந்தாய்
  இடவெந்தை எந்தைபி ரானே! (கூ)

(உரை) இடவெந்தை எந்தைபிரானே! மெல்தோள் பொன் குலாம் பயலை பூத்தன - மெல்லிய தோள்களானவை பொன்னிற மான பசலை நிறத்தை மேற்கொண்டன, பொரு கயல்கண் துயில் மறந்தாள் - ஒன்றோடொன்று தாக்குகின்ற இரு கயல்போன்ற கண் கள் உறக்கங்கொள்வதை மறந்தாள், உன்மேல் அன்பினால் ஆத ரம் பெரிது - உன்பாலுள்ள காதலால் ஆதாரம் பெருகாநின்றது, இவ் அணங்கினுக்கு உற்றநோய் அறியேன் - இவ்வழகிய பெண்ணுக்கு

8137
Q1:38



உண்டான நோய் இன்னதென்று அறிகின்றேனில்லை, மின்குலாம் மருங்குல் சுருங்க - மின்னல்போன்ற இடை துவளும்படியாக, மேல் நெருங்கி வீங்கிய வனம் முலையாளுக்கு - மார்பின்மேலே ஒன்றோடொன்று நெருக்கமுற்று வளர்ந்து பெருத்த ஸ்தனங்களையுடைய இம்மகளுக்கு, என் ஆம்கொல் - என்ன ஆகுமோ ? குறிப்பில் என் நினைந்திருந்தாய், உன் திருவுளத்தில் இவளைப்பற்றி என்ன நினைந்திருக்கிறாய் ?

குறிப்பு :—பசலை, நீர்ப்பாசிபோல காதலர் தொடுதொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரக்குந் தன்மையதென்பர் முன்னோர். (9)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE

அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
ஆய எம் மாயனே அருளாய்
என்னும் இன் தொண்டர்க் கின்னருள் புரியும்
இடவெந்தை எந்தை பிரானை
மன்னுமா மாட மங்கையர் தலைவன்
மானவேற் கலியன்வா யொலிகள்
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப் பாரே. (கo)

(உரை) அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய எம்மாயனே - ஹம்ஸரூபியாகவும் கூர்மரூபியாகவும் நரசிம்மரூபியாகவும் அவதரித்த எம்பெருமானே! அருளாய் என்னும் இன் தொண்டர்க்கு - கிருபை பண்ணவேணும் என்றுபிரார்த்திக்கின்ற இனிய பக்தர்களுக்கு, இன்னருள் புரியும் இடவெந்தை எந்தபிரானை - பரமகிருபையைச் செய்தருள்கின்ற திருவிடவெந்தைப் பெருமான் விஷயமாக, மன்னும் மா மடம் மங்கையர் தலைவன் - நிலைத்த பெரிய மாளிகைகளையுடைய திருமங்கையில் உள்ளார்க்குத் தலைவரும், மானம் வேல் கலியன் - சிறந்த வேலாயுதத்தை உடைய கலியன் என்ற திருநாமமுடையவருமான ஆழ்வாரது, வாய் ஒலிகள் பன்னிய பனுவல் பாடுவார் - திருவாயினின்றெழுந்த மொழிகளால் தொடுக்கப்பட்ட இப்பிரபந்தத்தைப் பாடுமவர்கள், பழவினை பற்றறுப்பார் - பூர்வ கர்மங்களைத் தொடர்பறுத்தவர்கள் ஆவர்.

குறிப்பு :—பனுவல் - பிரபந்தம். 'பழவினைப் பற்றறுப்பாரே' என்று பாடம் கொள்ளவும் தகும். (10)

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

## திருவிடவேந்தைப் பெருமானைப்பற்றித் திருமங்கையாழ்வார் சிறப்பித்தருளிய வேறிடங்கள்

### பெரிய திருமொழி

**முதற்பத்து - எட்டாம் திருமொழி - நான்காம் பாசுரம்**

பார்த்தற்காயன்று பாரதங்கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோத்தங்காயர்தம் பாடியில் குரவை பிணைந்த கோவலன்
ஏத்துவார்தம் மனத்துள்ளான் இடவேந்தை மேவிய வெம்பிரான்
தீர்த்தநீர்த்தடஞ் சோலைசூழ் திருவேங் கடமடை நெஞ்சமே.

* * *

### சிறிய திருமடல் (73-ம் கண்ணி)

காரார்குடந்தை கடிகை கடன்மல்லை
ஏரார் பொழில்சூழ் இடவேந்தை நீர்மலை.

* * *

### பிள்ளைப்பெருமாளையங்கார் என வழங்கும் ஸ்ரீஅழகியமணவாளதாசர் அருளிய பாசுரம்

### நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி-92

நின்று திரியும் பிறவியெல்லாம் நேர்வித்துக்
கொன்று திரியுக் கொடுவினையார்—இன்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து.

ஸ்ரீகுரவை இராமாநுஜதாசர் அருளிச் செய்த
நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழில்
திருவிடவெந்தை சம்பந்தமான

## 92-ஆம் திருப்புகழ்

தனதந் தத்தன தான தானன
தனதந் தத்தன தான தானன.
தனதந் தத்தன தான தானன—தனதானா

சிவனும் பித்துடை வாண னாலுணர்
வறிவின் றிப்படை யேறி னானென
செயல்கண் டப்பொழு தோடி னன்மிக விகலாதே
தெளிவின் றிப்பிரம தேவ னாரிடை
யரைவஞ் சித்தவ னாதி நாளுள
திறலும் பட்டமும் வீடி னானொரு மகவானே
அவனுஞ் சிற்றறி வாண்மை யால்வெகு
நிரையின் கற்பெரு மாரி தூவிகல்
லவியுந் திட்டமு மாறி னானொரு தமியேனே
வறிவுஞ் சற்றிலை யாகை யாலவ
ரவர்சிந் தித்தறி யாத சேவடி
யதுகும் பிட்டுயிர் வாழு மாறெவ னருளாயே
புவனந் தட்டழி யாம லேமணி
மகுடம் பத்துடை யானை யேயெதிர்
பொருதின் றெய்த்தனை நாளை வாவென நவில்போதே
புகழுங் கெட்டவ னுண்மை வீரமு
மரசுங் கெட்டவ னேக வேதனை
புரியின் பக்ஷனை வாரி யேயெமை யுடையோனே !
எவரந் தத்தினில் ராமாவென
முதல்ரண் டக்ஷர மோது வார்பர
விகழும் பெற்றர சாள வேயருள் புரிவோனே !
இளவண் டர்ச்சிறு தா[illegible]ழ மாமடல்
இருகென் றெற்றிவ ரால்கள் தாவிடும்
இடவெந் தைப்பதி வாழ மேவிய பெருமாளே.

கோவிலூர் ... 301